" நிதிக் கோரிக்கை எண் 46—அரசு வாணிகத் திட்டங்களுக்கான மூல தனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,28,50,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

சி. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

" நிதிக் கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 88,50,700-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(2) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1973-ம் ஆண்டு நிதி ஒதுக்க (3-ம் எண்) சட்ட முன் வடிவை அறி முகம் செய்ய நான் அனுமதி கோருகிறேன்.